








We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## AUGUST

*We Are Here..!! To Guide You..!!*










# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## ஆகஸ்ட் - 29.08.2018

Main Office @

**Weshine Study Circle**

Chromepet, Chennai

Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

A-90, 3rd Street (Near K3 Police Station),
Annanagar East
Chennai, Tamil Nadu 600102.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamilnadu 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- தேசிய நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- நியமனங்கள்
- விருதுகள்
- புத்தகங்கள்











# தமிழக நிகழ்வுகள்

- முன்னாள் பிரதமர் வாஜ்பாய் பெயரில், தமிழகத்தில் திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தேசிய மேல்நிலைப் பள்ளியில் **"அடல் டிங்கரிங்"** என்ற அறிவியல் தொழில்நுட்ப பயிற்சி ஆய்வகம் அமைக்கப்பட்டுள்ளது.
  - இந்த ஆய்வகத்தின் கற்றல், கற்பிக்கும் முறைகள் மட்டுமின்றி மாணவர்களை நேரடியாக அறிவியல் ஆய்வில் ஈடுபடும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- **குறிப்பு:**
  - அறிவியல் ஆய்வு கல்வியை நடைமுறைப்படுத்துவதில் இந்தியாவிலேயே தமிழகம் 2வது இடம் பிடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# இந்திய நிகழ்வுகள்

- ஸ்டான்போர்டு பல்கலைக்கழக பேராசிரியர் **"ஏ.ஜே.பால்ராஜ்"** தலைமையிலான ஒன்பது பேர் வழிகாட்டும் குழு **"Making India 5G Ready"** என்ற பெயரில் தனது "**5G** தொழில்நுட்பம் தொடர்பான உயர்மட்ட அறிக்கை" தொலை தொடர்பு செயலர் அருணா சுந்தர்ராஜன் அவர்களிடம் அளித்துள்ளது.
  - ஆரோக்கியசாமி ஜோசப் பால்ரஸ் **(A.J. Paul Raj)** இந்திய அமெரிக்க மின்சார பொறியியலாளர் ஆவார். இவர் தமிழ்நாட்டின் பொள்ளாச்சி நகரில் பிறந்தவர் ஆவார்.
- **குறிப்பு**
  - இந்தியாவில் 2020ம் ஆண்டிற்குள் **5G** தொழில்நுட்பம் வணிக ரீதியாக வெளிவரும் என்பதை இலக்காக இக்குழு கொண்டுள்ளது.

- அகமதாபாத், உதய்பூர், கொல்கத்தா விமான நிலையங்களின் மலைவாழ் மக்களால் தயாரிக்கப்படும் பொருட்களை விற்பனை செய்யும் **TRIBES INDIA** அங்காடிகளைத் திறக்க இந்திய விமான நிலைய ஆணையம் இடம் அளித்துள்ளது.
  - **Tribal Cooperative Marketing Development Federation of India Limited (TRIFED)**



We Shine Academy™

- இந்திய எரிவாயு ஆணைய நிறுவனம் குழாய்கள் வழியாக இயற்கை எரிவாயுவை கொண்டு செல்லும் சேவையின் கீழ் எளிதாக, முறையாக, எரிவாயுவை பதிவு செய்வதற்கான இணையப் பக்கத்தை **(www.gailonline.com)** பொட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சர் தர்மேந்திர பிரதான் தொடங்கி வைத்தார்
  - இந்தியாவில் எரிவாயு வர்த்தகத்தை ஒரே மையத்தில் அல்லது பரிமாற்ற வர்த்தக மேடையில் மேற்கொள்வதற்கு முதல் நடவடிக்கையாக இது இருக்கும்.

## விளையாட்டு நிகழ்வுகள்

- இந்தோனேஷியாவின் ஜகர்த்தா மற்றும் பாலேம்பங் நகரில் நடைபெற்று வரும் 18-வது ஆசிய விளையாட்டு போட்டியில், ஆடவருக்கான **800 மீட்டர்** ஓட்டத்தில் இந்தியாவின் **மன்ஜித் சிங்** **தங்கப் பதக்கம்** வென்றுள்ளார்.
  - இந்தியாவின் மற்றொரு வீரரான **ஜின்சன் ஜான்சன்** வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளார்.

## நியமனங்கள்

- ஐரோப்பா, ஆசியா மற்றும் ஆ.ஃப்ரிக்கா நாடுகளில் ஐ.நா மேற்கொண்ட பல்வேறு திட்டங்களில் பணியாற்றிய இந்தியாவைச் சேர்ந்த சத்யா எஸ்.திரிபாதி ஐ.நா சபையின் துணைப் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். **Assistant Secretary General and Head of the New York Office at UN Environment.**
  - மேலும் இவர் ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச் சூழல் திட்டத்தினை **(UNEP – United Nation Environment Programme)** செயல்படுத்தும் நியூயார்க் அலுவலகத்தின் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

- லண்டன் நகரில் உள்ள பிரிட்டன் நாட்டுக்கான இந்திய உயர் தூதராக ஒய்.கே. சின்ஹா பதவி வகித்து வருகிறார். அவரது பதவிக்காலம் நிறைவடையவுள்ள நிலையில், புதிய உயர் தூதராக **"ரூச்சி கனஷியாம்" Ruchi Ghanashyam High Commissioner Of India to United Kingdom** என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
- குறிப்பு

○ அயர்லாந்து நாட்டிற்கான இந்தியாவின் அடுத்த தூதராக **“சந்தீப் குமார்”** என்பவர் நியமிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## விருதுகள்

- கவிஞர் வைரமுத்துவின் **‘கள்ளிக்காட்டு இதிகாசம்’** நாவல் கடந்த 2003-ம் ஆண்டு சாகித்ய அகாடமி விருது பெற்றது. சாகித்ய அகாடமி இந்த நாவலை **23 மொழிகளில்** மொழிபெயர்த்து வருகிறது.
  - ○ முதலாவதாக, இந்தியில் **‘நாகபனீ வன் கா இதிஹாஸ்’** என்ற பெயரில் இந்த நாவலை எச். பாலசுப்பிரமணியன் மொழியெர்த்து, 2017ல் சாகித்ய அகாடமியால் வெளியிடப்பட்டது.
  - ○ தற்போது, இந்தியில் வெளிவந்த **“இந்தியாவின் சிறந்த புத்தகம்”** என்ற விருது இப்புத்தகத்திற்கு வழங்கப்பட்டுள்ளதாக மத்திய கலாச்சார அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

## புத்தகங்கள்

- பேரிடர்களால் ஏற்படும் தாக்கம், அதன் பாதிப்புகளை குறைப்பது தொடர்பான இயற்கையொட்டிய முறையான அணுகுமுறைகள், பேரிடர்களை எதிர்கொள்வதற்கான முறைகள் மற்றும் பல்வேறு தொலைநோக்குத் திட்டங்கள் அடங்கிய **‘பேரிடர் மேலாண்மை தொலைநோக்கு திட்டம் 2018-2030’** என்ற புத்தகத்தை **தமிழ்நாடு வருவாய் மற்றும் மேலாண்மைத் துறை** தயாரித்துள்ளது.
  - ○ இப்புத்தகத்தை தமிழக முதல்வர் ஆகஸ்ட் 28 அன்று வெளியிட்டுள்ளார்.